செ.வெ.எண் : 13 நாள் : 21.01.2026

# செய்தி வெளியீடு

## "தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை மாவட்ட பிரிவு – விளையாடு இந்தியா மாவட்ட மையம்" வில்வித்தை விளையாட்டுக்கான வீரர்/ வீராங்கனைகளுக்கான தேர்வுப் போட்டிகள் மற்றும் பயிற்றுநர் பணிக்கு விண்ணப்பிக்கலாம் – சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் " விளையாடு இந்தியா" (Khelo India) திட்ட நிதியுதவியில் "வில்வித்தை" பயிற்சிக்கான "தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – விளையாடு இந்தியா மாவட்ட மையம்" சென்னை மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ளது. இம்மையத்தில் விளையாட்டு வீரர்/ வீராங்கனைகள் சேர்க்கைக்கு பள்ளி மற்றும் கல்லூரி பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு தினசரி பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இந்த மையத்தில் பயிற்சியாளராக பயிற்சி வழங்கிட, தேசிய அளவில் சாதனைபடைத்த 40 வயதுக்குட்பட்ட வில்வித்தை வீரர்/ வீராங்கனை ஒருவர் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார். விண்ணப்பதாரர் சென்னையில் வசிப்பவராக இருக்க வேண்டும். சர்வதேச போட்டிகள் அல்லது தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கம் வென்றவராகவோ அல்லது அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் பதக்கம் வென்றவராகவோ, சர்வதேசப் போட்டிகள் மற்றும் சீனியர் தேசிய போட்டிகளில் கலந்து கொண்டவராகவோ இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் பயிற்சியாளருக்கு 11 மாதங்களுக்கு மாதாந்திர பயிற்சிக்கட்டணமாக ரூ.25,000/– வழங்கப்படும். இது நிரந்தரப்பணி அல்ல, முற்றிலும் தற்காலிகமானதாகும். இதன் அடிப்படையில் வேலைவாய்ப்பு சலுகைகளோ நிரந்தரப் பணியோ கோர இயலாது.

இவ்விளையாட்டிற்கு தகுதி வாய்ந்த வீரர்/ வீராங்கனைகளுக்கான நேர்முகத் தேர்வு போட்டிகள் சென்னை, நேருபூங்காவில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 28.01.2026 அன்று காலை 8.00 மணியளவில் நடைபெறவுள்ளது. உடற்தகுதி, விளையாட்டுத்திறன், பெற்ற பதக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு நடைபெறும்.

பயிற்சியாளராக சேர விரும்புவோர் விண்ணப்பத்தை பெற்று பூர்த்தி செய்து சென்னை நேரு பூங்காவில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டிய கடைசி நாள். 26.01.2026 மாலை 5.45 வரை ஆகும். இது தொடர்பான இதர விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் நேரிலோ அல்லது 74017 03480 என்ற தொலைபேசியிலோ தொடர்பு கொண்டு விவரம் பெற்றுக் கொள்ளலாம் என சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

****

**வெளியீடு :**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சென்னை–01.**